Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 93 · செவ்வாய்க்கிழமை Tuesday · 03.02.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## செங்கல்பட்டு மாவட்டம் சிறுசேரி சிப்காட் தொழில் நுட்ப பூங்கா வளாகத்தில்

# புனரமைத்து அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பூங்காவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்





செங்கல்பட்டு:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (2.2.2026) செங்கல்பட்டு மாவட்டம் சிறுசேரி சிப்காட் தொழில் நுட்ப பூங்கா வளாகத்தில் உள்ள நாவலூர் வரி 30 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டு, கரைகளைப் பலப்படுத்தப்பட்டு, புனரமைத்து அமைக்கப்பட்டுள்ள சிப்காட் சுற்றுச்சூழல் பூங்காவினை திறந்து வைத்தார்.

இந்தியாவிலேயே பெரிய பொருளாதார வளர்ச்சிமிக்க மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் துறையானது அனைவருக்கும் பயனளிக்கும் சமச்சீரான வளர்ச்சியை உறுதிசெய்து, பரவலான முதலீடுகளை ஈர்ப்பதில்தனி கவனம் செலுத்திவருகிறது.

அந்த வகையில், சிறுசேரி சிப்காட் தகவல் நுட்ப பூங்கா வளாகமானது 782.51 ஏக்கர் பரப்பளவில் 2002–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுசெயல்பட்டு வருகிறது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா சுமார் ஒரு லட்சம்பேருக்குவேலைவாய்ப்பை வழங்கியுள்ளதுடன், சுமார் 14,000 கோடி ரூபாய் முதலீட்டையும் ஈர்த்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நாவலூர் ஏரி வறண்டு போகும் நிலையில் இருந்தபோது, சிப்காட் முழு அளவிலான மாற்றத்தை உருவாக்கிட முன் நின்றது. தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் ஒரு முனைப்புடன், சிப்காட் நிறுவனம் 33.43 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நாவலூர் ஏரியைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி புனரமைத்தும், பூங்காக்கள். புல்வெளிகளுடன் கூடிய நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டும் பாதைகளை அமைத்தும், 30 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ள நாட்டின் பாதுகாப்பு பற்றி பேசுவது அதிமுக்கியமானது என்று நான் கருதுகிறேன்: ராகுல்காந்தி' கட்சியின் சின்னம் தொடர்பான கடிதங்களை தங்களுக்கு அனுப்ப கோரி ராமதாஸ் வழக்கு:தேர்தல்ஆணையம் பதில் தர உயர் நீதிமன்றம் உத்தரவு' ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டுள்ளது: வைகோ குற்றச்சாட்டு' தவெக3ம்ஆண்டுதுவக்க விழா; அதிமுக ஊழல் சக்தி: விஜய் மீண்டும் கடும் தாக்கு'

இச்சுற்றுச்சூழல் பூங்காவானது சுற்றுச்சூழல் அறிவு மையம், சிறுவர் சிறுமியருக்கானவிளையாட்டுப் பகுதி, திறந்தவெளி உடற்பயிற்சிக் மேற்கொள்வதற்கான வசதிகள், பறவைகள் பார்வை மையம்,திறந்தவெளி அரங்கம், நிர்வாக அலுவலகம், உணவகம், குடில்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்,பாதுகாப்பு மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த முன்னெடுப்பின் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டத்தை மேம்படுத்தியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிலைத்தன்மையை உறுதிபடுத்தியும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் அதனை சார்ந்த பகுதியின் சுற்றுப்புற தோற்றத்தினை செழுமைபடுத்துகிறது. இச்சுற்றுச்சூழல் பூங்கா. தகவல் தொழில்நுட்ப பூங்காவில் அமையப்பெற்றுள்ள நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், பள்ளிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி. செந்தில்ராஜ், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி. சினேகா, இ.ஆ.ப., சிறுசேரி தகவல் தொழில் நுட்ப பிரிதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தீய சக்தியை தி.மு.க.வை வீழ்த்த தூய சக்தியான தவெகவால் மட்டுமே முடியும் தலைவர் விஜய் பேச்சு



சென்னை: "அரசியலில் தங்களை யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை" என்று தவெக 3–ம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கட்சியின்தலைவர்விஜய் பேசினார்.

தவெக ஆரம்பித்து 2 ஆண்டுகள் நிறைவு பெற்று,மூன்றாம்ஆண்டு தொடங்கும் நிலையில், சென்னை பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமை நிலையத்தில் 3–ம் ஆண்டு தொடக்க விழா நடந்தது. முன்னதாக கட்சி வளாகத்தில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்த விஜய், தவெக கொள்கைத் தலைவர்களின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.தொடர்ந்து விஜய் தவெகவினர் மத்தியில் பேசியதாவது: காமராஜர், எம்ஜிஆர், அண்ணா இருந்த இடத்தில் இப்போது இவர்களும் இருக்கிறார்களே என்று தமிழக மக்கள் திமுகவைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர்.

தமிழகத்தில் புதிதாக யார் அரசியலுக்கு வந்தாலும் திமுக அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன அனுபவம் இருக்கிறது? என்று கேள்வி கேட்கும்.

எம்ஜிஆருக்கு அரசியல் அரிச்சுவடி தெரியுமா? என்று கேள்வி எழுப்பினர். காமராஜருக்கு இலக்கியம் தெரியுமா? என்று கொந்தளித்தனர். இன்று நம்மைப் பார்த்துக் கொந்தளிக்கின்றனர். அரசியலில் யார் அவர்களை எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை.

இத்தனையையும் மீறி தமிழகத்தில்மிகப்பெரிய கட்சியாக தவெக இன்று வளர்ந்திருக்கிறது. அதனால், டெக்னாலஜி வளர்ந்திருக்கும் சூழலில் விமர்சனங்களில் உங்கள் (திமுக) டெக்னிக்கையாவது மாற்றுங்கள்.

அதைவிடுத்து 50 வருடங்களுக்கு முந்தைய தகர டப்பாவை எடுத்து உருட்டுகிறார்கள். 'பவள விழா பாப்பாவுக்கு' வேறென்ன தெரியும். பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும்.

ஆனால், அதற்காக எல்லாம் அவர்கள் செய்யும் தவறுகளை, ஊழல்களை சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. மக்களுடைய ஒரே பிரதிநிதி தவெக மட்டும்தான். திமுகவை தொடர்ந்து நாம் விமர்சனம் செய்வோம்.

இந்த டிஜிட்டல் உலகில் திருவள்ளுவர் இருந்திருந்தால், "இந்த தீயசக்தியைபற்றி,"அநீதி அராஜகம் தில்லுமுல்லு இவையெல்லாம் திமுக முதற்றே உலகு" என்று திருக்குறள் எழுதியிருப்பார். தமிழக தேர்தல் களத்தில் மும்முனைப் போட்டி, நான்குமுனை போட்டி என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன். இங்கே மாபெரும் மக்கள் சக்தி கூட்டணி, திமுக கூட்டணி, பாஜக தலைமையில் மற்றும் பலர் கூட்டணி தான் இருக்கிறது. இதில்,திமுகவை வீழ்த்த மாபெரும் மக்கள் சக்தியான தவெகவால் மட்டும் தான் முடியும். அப்புறம், "ஏய் விஜய், வீட்டைவிட்டு வெளியில் வா..." என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள் பாஸ். தேர்தல் தேதியில் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டில் இருக்கும் ஒவ்வொரு விஜய்யும் வாக்காளர் அடையாள அட்டையுடன் காலையிலேயே பூத் பூத்தாகவந்துநிற்பார்கள். 'அன்றைக்கு ஏன் விஜய்யை கூப்பிட்டோம்' என்று நீங்கள் நினைப்பீர்கள். நான் என்ன பேசினாலும் 'இது என்ன சினிமாவா?' என்று ஆரம்பித்துவிடுகிறார்கள். நானே சினிமாவை விட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் அதை விடுவதாக இல்லை.

தேர்தலை ஒட்டி சில கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அவற்றில் சில சரியாகவும் இருக்கின்றன. கூடவே சில 'கடுப்புக் கணிப்புகள்' வருகின்றன.அந்த கடுப்புக் கணிப்பாளர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் தவெக இருக்கிறது. இதை நம்பவில்லை என்றால் நீங்கள் எடுத்த கடுப்புக் கணிப்பை ரப்பர் வைத்து அழித்துவிட்டு மீண்டும் எடுத்துப் பாருங்கள். அப்போதும் தவெக பற்றி அதே ரிசல்ட் தான் வரும். தவெக எல்லோரது வீட்டிலும் இருக்கிறது. இவ்வாறு விஜய் பேசினார்.

ஸ்டாலினை சீண்டிய விஜய்: வழக்கம் போலவே இன்றைய பேச்சிலும் திமுகவை மட்டுமல்லாது முதல்வர் ஸ்டாலினையும் விஜய் விமர்சித்துப் பேசியுள்ளார். "சிஎம் சார், ஸ்டாலின் சார், 2 வருடங்களுக்கு முன்பு ஒரு மேடையில், "சில அமைச்சர்கள் செய்யும் அட்ராசிட்டிகளைப் பார்த்து ராத்திரியில் தூக்கம் வரவில்லை" என்று சொன்னீர்கள். அந்த வீடியோகூட இன்னும் இணையத்தில் கிடைக்கிறது. அதையும் தாண்டி ஒருவேளை அவர் என்றாவது அசந்து தூங்கும்போது, 'சார் எந்த சின்னத்துக்கு ஓட்டுப் போடுவீர்கள்?' என்று யாராவது அவரை எழுப்பிக் கேட்டால், 'விசில்' சின்னத்துக்கு என்பார்." என்று விஜய் முதல்வர் ஸ்டாலினை கடுமையாக விமர்சித்தார். 'விசில் சின்னம் போகாத ஊரே இல்லை...' தொடர்ந்து பேசுகையில், "தவெக நகர்ப்புறங்களில் தான் இருக்கிறது. கிராமங்களில்இல்லைஎன்று சொல்பவர்கள் டெஸ்ட் பண்ணிப் பாருங்கள். விசில் சின்னம் போகாத ஊரே இல்லை. விசில் இருக்குமிடமெல்லாம் தவெக இருக்கிறது.

தமிழகத்தில் எனது அம்மா, அக்கா, தங்கை, அண்ணன், தம்பிகள் தவெகவுக்கு வாக்களிப்பதை எவராலும் தடுக்க முடியாது, அவர்களை என்ன விலை கொடுத்தாலும் வாங்க முடியாது,

திமுக என்ற தீய சக்தியை வீழ்த்த தவெக என்ற தூய சக்தியால் தான் முடியும். இது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. இதுதான் கள நிலவரம். தமிழக மக்களுக்கு தவெக தான் இப்போது இருக்கும்ஒரே ஆப்ஷன். வேறு எந்த டைவர்ஷனும் அவர்களுக்கு இல்லை.

தமிழக அரசியலில் தவெக ஒரு 'விசில் ப்ளோயர்'. இந்த விசில் ஊதுவதில் தீய சக்தி, ஊழல் சக்தி தெறித்து ஓட வேண்டும். அன்றைக்கு புனித ஜார்ஜ் கோட்டையில் தவெக ஆளும் கட்சியாக எழும். உங்களோடு நான் இருக்கிறேன். நம்மளோடு மக்கள் இருக்கிறார்கள். வெற்றி நிச்சயம்." என்றார்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை



வங்கதேச முன்னாள் பிரதமரும் அவாமி லீக் கட்சித் தலைவருமான ஷேக் ஹசீனாவுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சிறைத்தண்டனை விதித்து வங்கதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வங்கதேசத்தில்பூதாகரமாக வெடித்து ஆட்சி மாற்றத்தை விளைவித்த மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து, கடந்த 2024–ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் பிரதமர் பதவியை ராஜினாமாசெய்துவிட்டுஷேக் ஹசீனா(78) இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். அதன்பிறகு வங்கதேசத்தில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால ஆட்சி நடைபெற்று வருகிறது. வங்கதேசத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் பாதுகாப்புக்காக தஞ்சமடைந்துள்ள ஷேக் ஹசீனா மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.


இந்த நிலையில், இரு வெவ்வேறு ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளில் ஷேக் ஹசீனாவுக்கு பத்தாண்டுகள் சிறைத்தண்டனை விதித்து வங்கதேச நீதிமன்றம் திங்கள்கிழமை உத்தரவிட்டது.

அரசு வீட்டுவசதி திட்டமொன்றில், அரசு நில ஒதுக்கீட்டில் முறைகேட்டில் ஈடுபட்டதாக ஷேக் ஹசீனா மீது குற்றச்சாட்டுகள் பதிவான நிலையில், நீதிமன்ற விசாரணையில் அவை நிரூபிக்கப்பட்டுள்ளன.

ஷேக் ஹசீனா மட்டுமில்லாது, மேற்கண்ட வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அவருடைய உறவினர்களான முஜீப் சித்திக்,துலீப் ரிச்வானா சித்திக், ஆஸ்மினா சித்திக் மற்றும் பிறருக்கும் சிறைத்தண்டனை விதித்து தாக்கா சிறப்பு நீதிபதிகள் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன்,அவர்கள் அனைவருக்கும் தலா 1 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்தத் தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறைத்தண்டனையும் அனுபவிக்க உத்தரவிடப்பட்டது.

# திருச்செந்தூர் திருமுருகன் இறைவழிபாடு மன்றம் 52வது ஆண்டு தைப்பூச திருவிழா 3 நாட்கள் நடைபெற்றது

## 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு மகா அன்னதானம்



திருச்செந்தூர் திருமுருகன் இறை வழிபாடு மன்றத்தின் 52வது ஆண்டு தைப்பூசத் திருவிழாகோவைதுடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் கோவிலில் 3 நாட்கள் வெகு விமர்ச்சியாக நடைபெற்றது. மூன்றாம் நாளான இன்று முருக பெருமானுக்கு சிறப்பு அலங்கார பூஜைகள் செய்யப்பட்டது. தொடர்ந்துவேல்வைத்து பூஜை செய்து மகா அன்னதானம் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கோவை துடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் கோவிலில் திருச்செந்தூர் திருமுருகன் இறைவழிபாடு மன்றத்தின் 52வது ஆண்டு தைப்பூசத் திருவிழா 3 நாட்கள் வெகு விமர்ச்சியாக நடைபெற்றது. இதற்கு குருடம்பாளையம் ஊராட்சியின் முன்னாள் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலைவரும், திருச்செந்தூர் திருமுருகன் இறை வழிபாடு மன்றத்தின் தலைவரும்,அருள்மிகுவிருந்தீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவருமான பி.வி. மணி தலைமை வகித்தார்.

முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார பூஜைகள் வெகு விமர்ச்சியாகநடைபெற்றன. இதனையடுத்து முருகன் வேல் வைத்து பூஜைகள் செய்யப்பட்டு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட அன்னதான கூடத்தில் மலை போல் குவித்து வைக்கப்பட்ட வேகவைத்த சாப்பாட்டில் படிகள் அமைத்து மலர்கள் தூவி பூஜைசெய்யப்பட்ட வேல் நிறுத்தி அன்னதானம் தொடங்கப்பட்டது.

மகா அன்னதானத்தை அருள்மிகு விருந்தீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவருமான பி.வி. மணி, திமுக ஒன்றியச் செயலாளர் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த விழாவிற்கான அனைத்து பூஜைகளையும் முன் நின்று விருந்தீஸ்வரர் கோயில் தயாநிதிகுருக்கள்நடத்தி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அறங்காவலர் குழுத் தலைவருமான பி.வி.மணி இவ்விழா சிறப்பாக நடைபெற நன்கொடைகள் வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்தார். மேலும் விரைவில்விருந்தீஸ்வரர் கோவிலில்இராஜகோபுரம் அமைக்கும் பணிகளும், வளாகத்தினுள் கூரைகள் அமைக்கும் பணிகளும், அன்னதானக் கூடம் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள் கட்டப்படும் என தெரிவித்தார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சுவாமிநாதன், அம்சவேணி பழனிச்சாமி, , வி.பி.சண்முகம், சூரியா வெள்ளியங்கிரி, எல்.எம்.டபுள்யூ அசோகன், தம்பி பார்த்திபன், அன்னதான கமிட்டியினர், அன்புக்குமார் மற்றும் சண்முகசுந்தரம், பி.வி. செல்வராஜ், வேல்முருகன், கதிர்வேல், வேலுச்சாமி, தனசேகர், சுந்தரம், பழனிச்சாமி, ராமசந்திரன், ஏ வி எம் வேல்முருகன் மெய்யழகன், டெக்சன் ராஜன், சௌந்திரராஜன், பூபதி, வெள்ளகிணர் செல்வகுமார், ஜோதிமணி, விவீன், மோகனசுந்தரம், தணிக்கைசெல்வன், ரவிச்சந்திரன், சுரேஷ், பாபு, காளிதாஸ், பரமசிவம், பி.டி.மோகன்ராஜ், எல்.எம்.டபுள்யூ சிவகுமார், மணிகண்டன், சரவணகுமார் உள்ளிட்டவர்கள் செய்திருந்தனர்.

இவ்விழாவில் குமரேசன், குருடம்பாளையம் முன்னாள் துணைத்தலைவர் வசந்தாமணி, சகா விக்னேஷ் உள்பட சுற்றுவட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். மேலும் கோயில் விழா போட்டோ, வீடியோக்களை கார்த்தி ஸ்டுடியோ,ஏ.வி.எம்.ஸ்டுடியோ-வினர் எடுத்தனர். ஒளி ஒலி அமைப்பை கோபி செல்வம் குழுவினர் அமைத்திருந்தனர்.

### கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள கேஜிஐஎஸ்எல் கல்வி குழுமத்தின் சார்பாக,

# கோவை மாவட்டத்தை சுற்றியுள்ள சுமார் 4000த்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி பெருமை படுத்தப்பட்டது



கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள கேஜி.ஐ.எஸ்.எல் கல்வி குழுமத்தின் சார்பாக ஆண்டுதோறும் கல்வி விருது வழங்கும் விழா கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இதில் ஒவ்வொரு ஆண்டும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், மற்றும்பள்ளி ஆசிரியர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான கேஜி.ஐ.எஸ்.எல் கல்வி விருதுகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கேஜி குழுமத்தின் தாளாளர் பத்மஸ்ரீ டாக்டர்பக்தவச்சலம்வாழ்த்துரை வழங்கினார். கேஜி கல்வி குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் முனைவர்அசோக்பக்தவச்சலம்தலைமை உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உயர் இலக்குகளை வகுத்து, வெற்றி பெறுவதற்கான யுத்திகளை எடுத்து கூறினார்.

தொடர்ந்து கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில், உள்ள மேல்நிலை, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், பணியாற்றி வரும் முதல்வர்கள், சிறந்த ஆசிரியர்கள், நல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு விருதுகளும்,பரிசுகளும் வழங்கிபெருமைப்படுத்தப்பட்டது.

மேலும் ஆசிரியர் பணியே அறப்பணி என்று திறம்பட பணியாற்றிய 26சிறந்த ஆசிரியர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இவ்விழாவின் வாயிலாக 156 பள்ளிகளின் முதல்வர்களுக்கும், 1430 ஆசிரியர்களுக்கும், 1983 மாணவர்களுக்கும், விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டது. இதில் 183க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து, 4000த்திற்க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், என பலரும் கலந்து கொண்டு விருதுகளை பெற்றனர். இந்த நிகழ்ச்சியில், கோவை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிபாலமுரளி,கோவை மாவட்ட தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அலுவலர் நந்தகுமார், கேஜி கல்வி குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அரவிந்த்குமார் ராஜேந்திரன், செயலர் வனிதா, கல்லூரியின் முதல்வர் விஜ்யா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு கடல் வழியாக கடத்த முயன்ற ரூ.30 லட்சம் மதிப்புள்ள 200 கிலோ கஞ்சா பறிமுதல்

ராமநாதபுரம்:

இலங்கைக்கு கடல் வழியாக கடத்த முயன்ற ரூ.30 லட்சம் மதிப்புள்ள 200 கிலோ கஞ்சாபறிமுதல்செய்யப்பட்டது. 200 கிலோ கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை கடத்திய மணிகண்டன் என்பவர் கைது செய்யப்பட்டார்.





சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி அவர்கள் "போதையில்லா தமிழ்நாடு" நிலையை உருவாக்கும் வகையில், காவல்துறை மற்றும் போக்குவரத்துத் துறையுடன் இணைந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் போதைப்பொருளுக்கு எதிரானவிழிப்புணர்வுஒட்டுவில்லைகளைஒட்டிவிழிப்புணர்வுஏற்படுத்தும்நிகழ்வினை மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.



சிவகங்கை மாவட்டம் , காரைக்குடியில் உள்ள சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவர்களாகிய ஆ. கபிலன், ப. மாதவன், அ. விஸ்வா, அ.முகில் கார்த்தி, ரா.மணிகண்ட பிரபு, மா. ராகுல் பாண்டியன் ஆகியோர் கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவ திட்டத்தை (RAWE) மேற்கொண்டு அதன் மூலம் ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு (Participatory Rural Appraisal ) செயல்முறை விளக்கத்தினை காளையார்கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட மாந்தாளி கிராம மக்களுக்கு விளக்கினர். பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA) என்பது கிராமப்புற மக்கள் தங்கள் மேம்பாட்டுத் திட்டங்களை தாங்களே திட்டமிடுவதில் நேரடியாக ஈடுபடுத்தும் ஒரு முறையாகும். இது வெளிப்புற நிபுணர்களை மட்டும் நம்பியிருக்காமல், கிராம மக்கள் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், பிரச்சினைகளை கண்டறியவும், தீர்வுகளை பரிந்துரைக்கவும் ஊக்குவிக்கிறது. வரைபடமாக்கல், குழு விவாதங்கள் மற்றும் பருவகால விளக்கப்படங்கள் போன்ற எளிய கருவிகளைப் பயன்படுத்தி, சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள் பங்கேற்பதை PRA உறுதி செய்கிறது. மேலும், உள்ளூர் அனுபவங்களுக்கு மதிப்பளிப்பதன் மூலம், நடைமுறைக்கு சாத்தியமான, உள்ளடக்கிய மற்றும் நிலையான மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்க PRA உதவுகிறது என்பதை தெளிவான விவரத்துடன் மாந்தாளி கிராம மக்களுக்கு கூறினர்.



தமிழக அரசு நல வாரியங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்த வயதான ஓய்வூதிய காரர்களுக்கு இ பி எப் ஐ காரணம் காட்டி நிறுத்தப்பட்ட ஓய்வூதியத்தை உடனே திரும்ப வழங்குதல் உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் பி.எம்.எஸ் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### ஏகனின் திருப்பெயரால் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கடையநல்லூர் டவுண் கிளை சார்பில்

# திருக்குர்ஆன் திறனாய்வு போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி மற்றும் மார்க்க விளக்க கூட்டம்

## கிளைத் தலைவர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது




ஏகனின் திருப்பெயரால் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கடையநல்லூர் டவுண் கிளை சார்பில் திருக்குர்ஆன் திறனாய்வு போட்டிக்கான பரிசளிப்பு மற்றும் மார்க்க விளக்க கூட்டம் கிளைத் தலைவர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது .

இக் கூட்டத்தில் TNTJ பேச்சாளர் இல்யாஸ் M.I.Sc அவர்கள் கலந்துகொண்டு *கற்போம் ! கற்பிப்போம்!* என்கிற தலைப்பிலும்,சகோ. ரஃபீக் ராஜா *ரமலானை வரவேற்போம்* என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் மற்றும் மாவட்ட செயலாளர் ஜலாலுதீன் பொருளாளர் அன்வர் சாதிக் துணைச் செயலாளர்கள் பிலால், அப்துல் பாசித் ,குட்டி அப்துல்லாஹ், ஆகியோர் முன்னிலை வகித்தனர் இக்கூட்டத்தில் கீழ்காணும் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

இந்நிகழ்ச்சிக்கான ஏற்ப்பாட்டை கிளை செயலாளர் அப்துல் குத்தூஸ், பொருளாளர் செய்யது மசூது துணைத் தலைவர் இஸ்மாயில் ,துணைச் செயலாளர் முஹம்மது இப்ராஹிம் அணி நிர்வாகிகள் மக்தூம், செய்தனர் கடையநல்லூர் அனைத்து கிளை பாதுஷா, நல்லூர் சுலைமான், பாருக், சேகனா, நிரஞ்சர் ஒலி,சதாம், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

இறுதியாக தொண்டரணி செயலாளர் மர்வான் நன்றியுரையாற்றினார்.



# தென்காசி ஸ்ரீ குபேர சக்தி விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம்

தென்காசி ஸ்ரீ சக்தி நகர் ஸ்ரீ குபேர சக்தி விநாயகர் கோயில் 17 வது வருஷ அபிஷேகம் நடைபெற்றது விழாவை முன்னிட்டு அதிகாலை கணபதி ஹோமம்,லட்சுமி ஹோமம்,கும்ப பூஜை தொடர்ந்து விமான அபிஷேகம் விநாயகர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேகங்கள் சிறப்பு பூஜை தீபாரணை நடைபெற்றது. மாலையில் திருவிளக்கு பூஜை சுவாமிக்கு சந்தன காப்பு அலங்காரத்துடன் சிறப்பு தீபாரதனை நடைபெற்றது ஏற்பாடுகளை ஸ்ரீ குபேர சக்தி விநாயகர் சேரி டே பிள் டிரஸ்ட் நிர்வாகிகள் நாகராஜு,முத்துசாமி ஆனந்த் ஸ்ரீ ராம ஐயப்பன் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

### பாளையங்கோட்டை மேல்பாதி பகுதியில்

# உரிய ஆவணம் இருந்தும் அலட்சியம் நடவடிக்கை எடுக்குமா மாவட்ட நிர்வாகம்? தர்ணாவால் பரபரப்பு





கடலூர்மாவட்டம்ஸ்ரீமுஷ்ணம்அருகேஉள்ள பாளையங்கோட்டை மேல்பாதி பகுதியில் நில உரிமை தொடர்பான பிரச்சினையால் சம்பந்தப்பட்டோர் சார் பதிவாளர் அலுவலகம் எதிரே தர்ணாவில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பாளையங்கோட்டை மேல்பாதி கிராமத்தை சேர்ந்த நியாசுதீன் குடும்பத்தினர், தங்களது தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களை வாரிசுதாரர்கள் ஒற்றுமையுடன் மற்றொருவருக்கு விற்பனை செய்ய முடிவு செய்தனர்.

ஆனால் அதே பகுதியை சேர்ந்த ஒருவர், அந்த நிலம் கோவில் சொத்து என கூறி சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார். இதையடுத்து, உரிமையாளர்கள் தங்களது அனைத்து ஆவணங்களையும் பத்திரப்பதிவு துறை உயர் அதிகாரிகள் மற்றும் வட்டாட்சியரிடம் சமர்ப்பித்துள்ளனர். ஆவணங்களை ஆய்வு செய்த உயர் அதிகாரிகள், உரிய சரிபார்ப்புகள் செய்யப்பட்ட பின் உடனடியாக பதிவு பணிகளை முடிக்க ஸ்ரீமுஷ்ணம் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு அறிவுரை வழங்கியுள்ளனர். மேலும், இரண்டு முறை ஸ்ரீமுஷ்ணம் வருவாய்துறையினர் இந்நிலம் நியாசுதீன் குடும்பத்தினருக்கு சொந்தமானது என உறுதி செய்து,எந்த சந்தேகமும் இல்லாமல் பதிவு செய்யலாம் என உண்மை சான்றிதழ் வழங்கிஉள்ளனர்.இருப்பினும்,பலமாதங்களாக பதிவு தாமதப்படு த்தப்படுவதாக குற்றம்சாட்டி, நியாசுதீன் குடும்பத்தினர் சார் பதிவாளர் அலுவலகம் முன்பு திடீரென தர்ணாவில் அமர்ந்தனர்.

தகவல்அறிந்தஸ்ரீமுஷ்ணம்காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். காவல்துறை விசாரணையில், சார் பதிவாளர் ஆவணங்களை விரைந்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார். இதனைத் தொடர்ந்து, காவல்துறை மற்றும் சார் பதிவாளர் அளித்த உறுதியை ஏற்று, குடும்பத்தினர் அங்கிருந்து கலைந்து சென்றனர். மேலும் மீண்டும் காலதாமதம் ஏற்பட்டால், சார் பதிவாளர்அலுவலகம்முன்புபெரியஅளவிலான ஆர்ப்பாட்டம்நடத்தப்படும்எனவும் உடனடியாக உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி அமைப்பு சார்பில் சமத்துவ பொங்கல் விழா

## மதுராந்தகம் அதிமுக எம்.எல்.ஏ. மரகதம் குமரவேல் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி அமைப்பு சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில்சிறப்புஅழைப்பாளராக கலந்து கொண்ட மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல்,மதுராந்தகம்நகர செயலாளர் பூக்கடை கே .சி .சரவணன் ,கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளுடன் புத்தம் புது பானையில் பச்சரிசி வெல்லம் வைத்து சமத்துவ பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினர் மாற்றுத்திறனாளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்று சக்கர எலக்ட்ரிக்கல் சைக்கிள் மற்றும் ஊன்றுகோல் மற்றும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் பம்மல் அன்னை தெரசா மாற்றுத்திறனாளி சங்க இயக்குனர் திருமதி கவிதா தலைவர் திருமதி கலா கௌரவ தலைவர் அருணகிரி அய்யா செயலாளர் திருமதி தேவி உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# விஜய் செய்தியாளர்களை சந்தித்து விட்டால் அதுவே பெரிய சாதனை

## முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ பேட்டி



செய்தியாளர்களை சந்தித்து குறிப்பாக ஊடகவியலாளர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டால் அதுவே ஒரு சாதனை.* ...

முதலமைச்சருக்குபயம் வந்துவிட்டது

அதிமுகவுடன் பாஜக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு பெருகி கொண்டிருப்பதை பார்த்து முதல்வரால் சகித்துக் கொள்ள முடியவில்லை

தேசிய ஜனநாயக கூட்டணி என்பது மிக வலுவாக உள்ளது

முதலமைச்சர்வேட்பாளராக போட்டியிடுகின்ற இபிஎஸ் இருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது

திராவிட மாடல் என்று அறிவிப்பு கொடுத்து நடத்திக் கொண்டிருக்கக் கூடிய முதலமைச்சரைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்த நிர்வாகி இபிஎஸ்

கொடுத்து வாக்குறுதியை நிறைவேற்றக்கூடியவர் என்கின்ற அடிப்படையில் மக்கள் மத்தியில் ஆதரவை பெற்று இருக்கிறார்

எப்போதும் எங்களது கொள்கைகளில் இருந்து நாங்கள் மாறுபட்டது கிடையாது

பாஜக உடன் கூட்டணி வைத்த போது அவர்கள் சொன்னதை எல்லாம் செய்தார்கள் திமுகவினர்

அறிஞர் அண்ணா கொண்டு வந்த இந்தி எதிர்ப்பை பாஜகவுடன் கூட்டணி வைத்து .... தமிழகத்தில் இந்திமொழியை பரப்பியவர்கள் திமுகவினர் ....

இந்த நிலையில் எங்கள் கூட்டணி மீது ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்று பேசிக்கொண்டே வருகின்றனர் திமுகவினர்

அவர்கள் கூட்டணி வைத்தால் அது நட்பு ரீதி என்றும் நாங்கள் கூட்டணி வைத்தால் அடிமை என்றும் அவர்கள் கூறுவதற்கு என்னவென்று சொல்ல தெரியவில்லை முதலமைச்சருக்கு பதட்டம் வந்துவிட்டது

கனிமொழி சிறந்த நிர்வாகி ஆனால் அவர் குறித்து விமர்சனம்செய்ய நான் விரும்பவில்லை

கருணாநிதியைப் போன்று அதாவது, தன் அப்பாவைப் போல தன்னை எதிர்ப்பவரை குறை கூற கூடியவர் தான் அவரும் மத்திய பட்ஜெட் என்பது ஒரு முன்னோட்டம் தான்

அது நடைமுறைக்கு வரும்போது நிறைய திட்டங்கள் வர உள்ளது

பட்ஜெட்டை பார்க்கும் போது சிலருக்கு கசக்கும் சிலருக்கு புலிக்கும் சிலருக்கு

நெல்லிக்கனி போல மத்திய அரசு பட்ஜெட் மோடிதலைமையில்,தமிழகத்தில் சொந்தக்காரர் நிர்மலா சீதாராமன் ஒன்பதாவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்திருப்பது நமது தமிழகத்தை சார்ந்தவர் என்பதில் நமக்கு பெருமை

தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வண்ணமாக சேலை அணிந்த பெண்மணியாக நமது சீதாராமன் இருந்து வருகிறார் மெட்ரோ ரயில் குறித்து மக்கள் மத்தியில் புரிதல் இல்லை

மத்திய அரசு கொடுக்க மறுக்கவில்லை ஆனால் தமிழக அரசு முறையான ஒரு வழிகாட்டு முறையை பின்பற்ற வில்லை

சரியான விளக்கம் கொடுக்கவில்லை என்கின்ற காரணத்தினால் தான் மத்திய அரசிலிருந்து கேட்டு கடிதம் அனுப்பி இருந்து மத்திய அரசு புறக்கணிப்பு என்று பரப்பி வருகிறார்கள்

தேர்தல் நெருங்கும் நிலையில் இவ்வாறு பரப்பி வருகிறார்கள்

செங்கோட்டையன் செல்லாக்காசு அவருடைய பேச்சை எல்லாம் பெரிதாக பேச தேவையில்லை

யாருமேஏற்றுக்கொள்ளாத நிலையில் தற்போது எங்களிடமிருந்து அங்கு போய் இருக்கிறார்

அவர் குறித்து பேசுவதையும் கேள்வி கேட்பதையே மறந்த நிலையில் மீண்டும் அவருடைய பேச்சை சொல்ல சொல்கிறீர்கள்

போகிற போக்கில் ஏதாவது அவர் பேசுகிறார்.... எனவே செங்கோட்டையன் குறித்து பேச வேண்டாம்

தூத்துக்குடி துப்பாக்கி சம்பவம் நடைபெற்ற போது செங்கோட்டையன் எங்கு இருந்தார்

செங்கோட்டையன் குறித்து செல்லூர் ராஜு சாடல் என்று பதிவு செய்து விடுவீர்கள் ....செய்தியாக அதனால் அதைப் பற்றி பேசவேண்டாம் எடப்பாடி யார் தான் முதல்வராக வரவேண்டும் என்கின்ற ஒரு நிலையில் மக்கள் உள்ளார்கள்

இது போன்ற போதை கலாச்சாரம் மிக்க ஒரு தமிழகத்தை நாங்கள் பார்க்கவே இல்லை என சினிமா படத்தில் வரக்கூடிய வசனம் போல மக்கள் உணருகிறார்கள் என்று (தனக்கே உரிய பாணியில்) விஜய் செய்தியாளர்களை சந்தித்து விட்டால் அது பெரிய சாதனை

செய்தியாளர்களை சந்தித்து குறிப்பாக ஊடகவியலாளர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டால் அதுவே ஒரு சாதனை.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பு.மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான எரியில் அனுமதியின்றி ஜேசிபி இயந்திரம் மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் மண் அள்ளப்பட்டு வந்தது. இது பற்றி தகவல் அறிந்த கிராம மக்கள் ஏரியில் குவிந்து ஏரி மண் அனுமதியின்றி எடுக்கக் கூடாது என கூறி திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர் அப்போது ஏரியில் அதிகளவு ஆழம் எடுக்கப்படுவதாக கூறி அங்கு இருந்த லாரிகள் மற்றும் ஜேசிபி இயந்திரத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்



## மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில்

# ரஜினி ரசிகர்களின் வேண்டுதலை ரசிகர்களுடன் நிறைவேற்றிய ரஜினியின் சகோதரர் சத்யநாராயணன்

## இந்த மாதிரி கோவிலை நான் பார்த்ததே இல்லை என்றும் பேட்டி


சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் மூத்த சகோதரர் சத்யநாராயண ராவ் கெய்க்வாட் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் இன்று சாமி மேற்கொண்டார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டு பெங்களூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடல் நலம் பாதிக்கப்பட்ட சத்தியநாராயண ராவ் பூரண உடல் நலம் பெற வேண்டி திருப்பரங்குன்றத்தை சேர்ந்த தீவிர ரஜினி ரசிகர் கோல்டன் சரவணன் மற்றும் ரசிகர்கள் சிகிச்சையில் இருக்கும் ரஜினியின் சகோதரர் சத்யநாராயணன் ராவ் பூர்ண உடல் நலம் பற்றி வீடு திரும்பினால் திருப்பரங்குன்றம் முருகனுக்குபால் அபிஷேகம் செய்வதாக வேண்டி இருந்தார். இந்த நிலையில் சத்யநாராயணன் ராவ் உடல்நிலை பெற்று திரும்பிய நிலையில் வேண்டுதலை நிறைவேற்ற அவருக்கு அழைப்பு விடுத்த நிலையில் தம்பியின் ரசிகர்களின் அழைப்பை ஏற்று அவரும் இன்று திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோவிலுக்கு வந்திருந்து சாமி தரிசனம் மேற்கொண்டு 51 லிட்டர் பசும்பால் கொண்டு மூலவர் முருகனின் திருகரத்தில்உள்ளவேலுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் அபிஷேகத் செய்யப்பட்ட பாலை பக்தர்களுக்கு வழங்கினார். அவரைப் பார்த்ததும் கோயிலுக்கு வந்திருந்த பக்தர்கள் தூய்மைபணியாளர்கள் சிலர் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறுகையில்: ரொம்ப பழமையான விசேஷமான கோவில் இந்த மாதிரி கோவிலை நான் பார்த்ததே இல்லை எல்லாரும் நல்லா இருக்கணும் நல்லது செய்யணும் வேண்டிக் கொண்டுள்ளேன் தரிசனம் விசேஷமாக இருந்தது. நான் உடல் நலம் பெற வேண்டி வேண்டி இருப்பார்கள் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை அவர்கள் குடும்பம் நல்லா இருக்க வேண்டும் ரஜினிக்காக ரசிகர்கள் கோவில் கட்டி வழிபடுவது அவர்களின் இஷ்டம் கோல்டன் சரவணன் புதிதாக கட்டி உள்ள வீட்டில் ரஜினி சிலை அருமையாக இருந்தது. முருகன் அருளால் எல்லோரும் நல்லா இருக்கவேண்டும்என்று வேண்டிக்கொண்டேன் என்றார்.




தூத்துக்குடி மத்திய மாவட்ட த.வெ.க சார்பில் தமிழகவெற்றிக் கழகத்தின் 3ம்ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. தூத்துக்குடி மத்திய மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் S.D.R சாமுவேல் ராஜ் தலைமையில் கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்குஇனிப்புகளைவழங்கினார்.தொடரந்துவிசில்சின்னத்தைவாக்காளர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் விசிலை இனிப்புடன் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் பகுதி வார்டு செயலாளர்கள் கழக தொண்டர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில்1/2/26தைமாதம்பௌர்ணமிதைப்பூசம்திருநாளில்ஞாயிற்றுக்கிழமை காலையில் சிறப்பு அபிஷேகம் செய்து தீபாராதனைகளும் நடைபெற்றது காலையில் இருந்தே பக்தர்கள் கிரிவலம் வந்து தரிசனம் செய்தனர் வருகை தந்த பக்தர்களுக்கு சிறப்பான அன்னதானத்தை முன்னால் முதல் அமைச்சர் மாண்புமிகு ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார்ஏற்பாடுகளைஅன்பர்பணிசெய்யும்பராமரிப்புகுழுவினர்கள்செய்துள்ளார்கள்

# போலி பல்பு விற்ற தனுக்கோடி ஆதித்யா ஆட்டோ ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.40 ஆயிரம் அபராதம்!

## நாமக்கல் நுகர்வோர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு: வழக்கறிஞர் இன்றிப் போராடி வென்ற கார் உரிமையாளர்!



கோவையில் விலை உயர்ந்த காருக்கு போலி ஹெட்லைட் பல்புகளை விற்று ஏமாற்றிய கோயம்பத்தூர் உதிரிபாக விற்பனை நிலையத்திற்கு ரூ.40,850 அபராதம் விதித்து நாமக்கல் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.நாமக்கல் மாவட்டம் ராசு கவுண்டன் புதூர் பகுதியை சேர்ந்த பிரபு என்பவர், தனது 'டொயோட்டா கொரோல்லா ஆல்டிஸ்' காருக்காக, கோவை காந்திபுரம் நஞ்சப்பா சாலையில் உள்ள சீனிவாசன் பொன்னுசாமி, பிரமிளா ஆகியோருக்கு சொந்தமான தனுக்கோடி ஆதித்யா ஆட்டோ ஸ்டோர்ஸ் நிறுவனத்தில் கடந்த 2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டு பிலிப்ஸ் பல்புகளை வாங்கியுள்ளார். சுமார் 3,000 ரூபாய் கொடுத்து வாங்கிய அந்த பல்புகள், அடுத்த சில மாதங்களிலேயே பழுதாகி 'பல்'லிளித்தன.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர், பிலிப்ஸ் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் அனுப்பினார். புகாரை விசாரித்த நிறுவனம், அவருக்கு இரண்டு பல்புகளை இலவசமாக வழங்கியது. அப்போதுதான், தான் முதலில் வாங்கிய பல்புகள் அசல் அல்ல, அவை போலியானவை என்பது பிரபுவுக்குத் தெரியவந்தது.

இதுகுறித்து கடையிடம் விளக்கம் கேட்டபோது, அவர்கள் முறையாகப் பதிலளிக்கவில்லைமாறாக, "பரிகாரம் கிடைத்துவிட்டது, இதற்கு மேல் நீதிமன்றம் போனால் சரியிருக்காது" என மிரட்டும் தொனியில் பதில் வந்துள்ளது. இதனால் ஆவேசமடைந்த பிரபு, சட்டத்தின் கதவைத் தட்ட முடிவு செய்தார்.

வழக்கறிஞர்கள் பலரும் "இந்த வழக்கு நிற்காது" எனக் கைவிரித்த நிலையிலும், பிரபு மனம் தளரவில்லை. இணையதளம் மற்றும் 'யூடியூப்' உதவியுடன் நுகர்வோர் சட்டங்களை முறையாகக் கற்றுக்கொண்டார். போலி பல்புகளின் அட்டைப்பெட்டி, அதில் இருந்த பார்கோடு, வரி ரசீதில் இருந்த குளறுபடிகள் என அனைத்து ஆதாரங்களையும் திரட்டி, வழக்கறிஞர் உதவியின்றி நாமக்கல் நுகர்வோர் நீதிமன்றத்தில் தானே வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நாமக்கல் மாவட்ட நுகர்வோர் தீர்ப்பாயம், வாடிக்கையாளரை திட்டமிட்டு ஏமாற்றியது உறுதியானதால், தனுக்கோடி ஆதித்யா ஆட்டோ ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு பின்வரும் அபராதத்தை விதித்தது. பல்புகளின் விலை ரூ. 8,850, இழப்பீட்டுத் தொகை: ரூ. 25,000மன உளைச்சலுக்கான இழப்பீடு: ரூ. 5,000 மற்றும் வழக்குச் செலவு: ரூ. 2,000 மொத்தம் 40,850 ரூபாய் தொகையை 60 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

ஏற்கனவே இந்த நிறுவன உரிமையாளர் சீனிவாசன் மீது சொந்த சகோதரரே போலி ஆவணங்கள் மூலம் பல கோடி ரூபாய் ஏமாற்றிய வழக்கு கோவை மாநகர குற்றப்பிரிவு போலீசில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"பெரிய கடைகளுக்குச் சென்றால் அசல் பொருட்கள் கிடைக்கும்என்ற நம்பும் நுகர்வோரை ஏமாற்றுவது தவறு" என்பதை இந்தத் தீர்ப்பு உணர்த்தியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.

# அச்சிறுப்பாக்கம் வஜ்ரகிரி வடிவேலன் தை மாத பௌர்ணமி கிரிவலம்



செங்கல்பட்டுமாவட்டம்அச்சிறுப்பாக்கம்வஜ்ரகிரி வடிவேலன் கிரிவல குழு சார்பாக தைமாத பௌர்ணமியை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் வஜ்ரகிரி மலை அடிவாரத்தில் உள்ள வழி விடு விநாயகர்ஆலயத்தில்இருந்துகிரிவலம்புறப்பட்டனர். அச்சிறுப்பாக்கம் வஜ்ரகிரி வடிவேலன் தை மாத பௌர்ணமி கிரிவலமகாஞ்சிபுரம் தவத்திரு.பவானி சங்கர்சுவாமிகள்தலைமையில்வஜ்ரகிரிவடிவேலன்

கிரிவல குழு பொறுப்பாளர் செல்வம் பிரிங்கிமலை மு.சரவணன் முன்னிலையில்சிறப்புஅழைப்பாளராக திரைப்படஇயக்குனர்ஆசி.சௌந்தர்கலந்துகொண்டு கிரிவலத்தை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட சுமங்கலி பெண்களுக்குஅச்சிறுப்பாக்கம்பேரூராட்சி

மன்ற கவுன்சிலர் அகிலா செல்வம், ராஜசங்கரி, ராஜராஜேஸ்வரி மூவரும் சேர்ந்து அவருடைய திருகரங்களால் புடவை மாங்கல்யம் குங்குமம் மஞ்சள் ரக்ஷ கயிறு ஆகியவை வழங்கினர்.பின்பு விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும்

பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். இதில்

பாரதிய இந்து திருக்கோயில் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பிருங்கிமலை இராமசுப்பிரமணியன், வழக்கறிஞர் பிரபாகரன், மற்றும் மகளிர் அணியினர் சிவனடியார்கள் பொதுமக்கள் உட்படபலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (02.02.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 340 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில்,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், உதவி இயக்குநர் (கலால்) தியாகராஜன் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



DHINATH DHALAM Morning Tamil Daily 03.02.2026



திருநெல்வேலி ஆர்யாஸ் ஹோட்டல் அரங்கில் நடைபெற்ற தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களுக்கான 2026 திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கூட்டத்தில், தேர்தல் அறிக்கையில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி சார்பில் சேர்க்கப்பட வேண்டிய கோரிக்கைகள் குறித்த மனுவை, கழக துணை பொதுச்செயலாளர் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பியிடம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் வழங்கினார்.உடன் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன், கழக மருத்துவரணி செயலாளர் டாக்டர்.எழிலன் நாகநாதன் உள்ளிட்டோர்.




தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (02.02.2026) ஈரோடு மாவட்டம், கருந்தேவன்பாளையம், நஞ்சைஊத்துக்குளி, அல் அமீன் பொறியியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் உளுந்தூர்பேட்டை பகுதியில் உள்ள 8 தனியார் கலை அறிவியல் கல்லூரிகள் பாலிடெக்னிக்குகள் பாராமெடிக்கல் கல்லூரிகளில் படிக்கும் 714 மாணவ மாணவிகளுக்கு உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன் தலைமையேற்று விலையில்லா மடிக்கணினி வழங்கினார். அப்போது பேசிய அவர் இந்தியாவிலேயே உயர்கல்வியில் அதிகம் பேர் படிப்பது தமிழ்நாட்டில் மட்டும்தான் என்றும் 43% உயர்கல்வி படித்து வருவதாகவும் உயர்கல்வியில் தமிழகம் தனித்து விளங்குவதாகவும் அதற்கு காரணம் மாணவ மாணவிகளின் கல்வி நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் செயல்படுத்தி வருவதால் மாணவர்கள் அதன்மூலம் பயன் பெறுவதாக கூறினார் இதில் மகளிர் திட்ட மாவட்ட திட்ட இயக்குனர் சிவப்பிரகாசம் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (02.02.2026) ஈரோடு மாவட்டம், அறச்சலூர் நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (02.02.2026) ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம், டாக்டர். ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் அரசு நேரடி கொள்முதல் விற்பனை நிலையத்தினை திறந்து வைத்தார்

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி, வாய்க்கால்புதுார் பகுதியில் நேற்று (02.02.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழத்தின் சார்பில் அரசு நேரடி கொள்முதல் விற்பனை நிலையத்தினை திறந்து வைத்தார்.

அரசு விவசாயிகளின் நலன்கருதி.விவசாயிகள் விளைவித்த நெல்லினை நேரடியாக அரசே கொள்முதல் செய்யும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு.நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் KMS 2024-2025 பருவத்தில் தடப்பள்ளி அரக்கன் கோட்டை கீழ் பவானி காளிங்கராயன் மற்றும் மேட்டூர் வலது கரை பாசன பகுதிகளில் 78 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் மொத்தம் 107297.320 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 261,70,26,082/- ECS மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு 12,328 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கே.எம்.எஸ் 2024-2025-பருவத்தில் சென்னிமலை ஒன்றியம் எக்கட்டாம்பாளையம் ஊராட்சியில் வாய்க்கால்புதூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 1057 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் தற்பொழுது KMS 2025-2026 பருவத்தில் தடப்பள்ளி அரக்கன் கோட்டை கீழ்ப் பவானி காளிங்கராயன் மற்றும் மேட்டூர் வலது கரை பாசன பகுதிகளில் 79 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் மொத்தம் 41515.000 மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.104,38,55,050/- ECS மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு 5,962 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நல்ல தரமான ஈரப்பதம் 17% க்குள் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படும். மேலும், விவசாயிகளின் நெல் கீழ்க்கண்டவிலைபட்டியல்படி கொள்முதல் செய்யப்படுகிறது. நெல் கிரேடு 'ஏ' - நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.2,389/- குறைந்தபட்ச ஆதார விலையாக, ரூ.156 ஊக்கத்தொகையாகவும், குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகை கூடுதல் (குவிண்டால் ஒன்றுக்கு) ரூ.2,545/- விற்பனை செய்யப்படவுள்ளது. மேலும் நெல் பொது ரகம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.2,369/- குறைந்தபட்ச ஆதார விலையாக, ரூ.131 ஊக்கத்தொகையாக, குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகை கூடுதல் (குவிண்டால் ஒன்றுக்கு) ரூ.2,500/- விற்பனை செய்யப்படவுள்ளது. -



மேற்கண்ட விலையின் அடிப்படையில் விவசாயிகளிடம் நெல்லிற்கான உரிய ஆவணங்கள் பெற்று e-Procurement முறையில் விவசாயிகளின் கைரேகை Finger print மூலம் பதிவு செய்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு,கொள்முதல் செய்யப்பட்டதற்குண்டான தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ECS முறையில் வழங்கப்படும்.

மேலும் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல்லினை விற்பனை செய்ய கிராம நிர்வாக அலுவலரின் சான்று, பட்டா, சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் பாஸ்போட் சைஸ் போட்டோ-2 ஆகியவற்றுடன் நேரில் வந்து e-Procurement முறைப்படி கைரேகை பதிவு செய்து, தங்களது நெல்லினை விற்பனைசெய்துகொள்ளலாம்.

விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல்லினை கொண்டு வரும்போது உரிய ஆவணங்களுடன் கொண்டுவர வேண்டும். உரிய விவசாயிகள் மட்டுமே கொள்முதல் நிலையத்திற்கு தங்கள் நெல்லினை கொண்டு வரவேண்டும்.

இந்நிகழ்வில், மண்டல மேலாளர் (தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக்கழகம்) பானுமதி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்

சிந்துஜா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி ரூ.12.39 இலட்சம் மதிப்பீட்டில் 253 பள்ளி மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்

ஈரோடு மாவட்டம். வீரப்பன்சத்திரம், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (02.02.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி 253 மாணவியர்களுக்கு .12.39 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

,மாணவ மாணவியர்கள் உடல், மனம் ஆரோக்கியத்தை காத்திடும் வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் விளையாட்டுத்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, சிவகிரியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.மேலும் அரசு சிக்கய்ய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறு விளையாட்டு அரங்கம், மிகப்பெரிய நூலகம், போட்டித்தேர்வுகளுக்கு பயில பயிற்சி மையம் ஆகியவையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனை மாணவ, மாணவியர்கள் பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர்கள் பெருமைப்படும் அளவில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். அந்த



வகையில் கிராமப்புற மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறார்கள்.

நேற்றைய தினம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் , வீரப்பன்சத்திரம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 11-ம் வகுப்பு பயிலும் 253 மாணவியர்களுக்கு (தலா ரூ.4,900 வீதம்) ரூ.12,39,700/- மதிப்பீட்டில் விலையில்லாமிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் பலர்கலந்துகொண்டனர்.

# சமூக சேவகர் விருது பெற்றார் சமூக நீதி மக்கள் கட்சித் தலைவர் வடிவேல்ராமன்: அமைச்சர் சு.முத்துசாமியிடம் வாழ்த்து பெற்றார்



சமூகசேவையில்தடம்பதித்துவரும்ABJகுழுமத்தின் (ABJ Groups of Companies) சமூக சேவை அமைப்பின் சார்பில், 'ABJ VIP GLOBAL 2026' உயரிய விருதுகள் வழங்கும் நிகழ்வு ஈரோடு மாநகர் சக்தி சாலையில் உள்ள ரத்னா ரெசிடென்ட்சியில் நடைபெற்றது. இவ்விழாவில் சமூக நீதி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் வடிவேல்ராமன் அவர்களுக்கு "சிறந்தசமூக சேவகர் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கடந்த 25 ஆண்டுகளாக அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் வடிவேல்ராமன் ஆற்றி வரும் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர் புகழ்மிகு பொல்லான் அவர்களின் வரலாற்றுச் சுவடுகளை ஆவணப்படுத்தும்வகையில்அவர்எழுதியவரலாற்று நூலும் இந்த அங்கீகாரத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்தது. விருது பெற்ற வடிவேல்ராமன் அவர்கள், தமிழகவீட்டுவசதிமற்றும்மதுவிலக்குஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

வடிவேல்ராமன் அவர்களின் கால் நூற்றாண்டு கால சமூகப் பணியையும், வரலாற்று ஆய்வுப் பணிகளையும் அமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியதுடன், தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்தச்சந்திப்பின்போதுசமூகஆர்வலர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகர் சத்தி சாலையில் உள்ள ரத்னா ரெசிடென்ட்சியில் எபிஜே குரூப் ஆப் கம்பெனியின் சமூக சேவை அமைப்பான எபிஜே டைனமிக் பவுண்டேஷன், அமுதசுரபி எபிஜே உணவுவங்கி, எபிஜே விஐபி குளோபல் சாமானியனின் குரல் மாத இதழ் இணைந்து (01022026) அன்று ஈரோட்டில் எபிஜே விஜபி குளோபல் 2026 விருது & கலாசாரம் & சமூக நல்லிணக்கம் &தொழில் வளர்ச்சி திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது இந்த விழாவில் ஈரோடு கிழக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் V. C. சந்திரகுமார் அவர்களின் சிறப்பான மக்கள் நல சேவைகளை அங்கிகரித்து அவருக்கு "எபிஜே விஜபி குளோபல் 2026 சிறந்த இளம் சட்டமன்ற உறுப்பினர் விருது "வழங்கியும், ஈரோடு மாநகராட்சி மேயர் S. நாகரத்தினம் சுப்ரமணியன் அவர்களின் சிறப்பான மக்கள் நல சேவைகளை அங்கிகரித்து அவர்களுக்கு "எபிஜே விஜபி குளோபல் 2026 சிறந்த இளம் மேயர் விருது எபிஜே டைனமிக் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர். எபிஜே. சலீம், தலைமை நிர்வாக ஒருங்கிணைப்பாளர் டாக்டர். S. லட்சுமி பிரபா, கோவை மாநகர எபிஜே சுற்றுசூழல் அணி ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் என்கிற கோவிந்தசாமி ஆகியோர் இணைந்து வழங்கி சிறப்பித்தார்கள். மேலும் பல்வேறு துறை சார்ந்தவர்களுக்கு விருது வழங்கியும், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், நலத்திட்ட உதவிகள் வழங்கபட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.